வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 2100 of 2024

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பிரகாஷ் | தொழில் | : | தலைமை காவலர் |
| தந்தை பெயர் | : | குமரவேல் | வயது | : | |
| கிராமம் | : | காமநாயக்கன் பாளையம் காவல் நிலையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08.06.2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 08.06.2026.**

1) நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் தலைமைகாவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.08.2024 ஆம் தேதி காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திரு. மூர்த்தி மற்றும் காவலர் திரு. சந்தோஷ் காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கேத்தனூர், எலவந்தி, கள்ளிபாளையம், புத்தரச்சல் ஆகிய இடங்களில் மதுவிலக்கு குற்ற தடுப்பு அலுவலக ரோந்து செய்துகொண்டிருந்தபோது கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வெள்ளநத்தம் பெரியகாட்டுத்தோட்டத்தில் பழனிச்சாமி என்பவருக்கு சென்றபோது அங்கு தென்னை மரங்களுக்கு இடையில் நின்று கொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்டியை கண்டிவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் பழனிச்சாமி என்றும், வெள்ளநத்தம் பெரியகாட்டுத்தோட்டத்தை சேர்ந்தவர் என்று சொன்னவரை அவர் தன்னுடைய தென்னை தோப்பிலிருந்து தென்னை மரங்களிலிருந்து

பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத மண் பானைகளை வைத்து சட்ட விரோதமாக தன்னுடைய சுயலாபத்திற்காக கள் இறக்கி அதை விற்பனை செய்ய வைத்திருப்பதாக சொல்லி அவர் தென்னை மரங்களுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த மண் பானைகளியிலிருந்த கள்ளை எடுத்து ஆஜர் செய்தவரை 28.08.2024 ஆம் தேதி 10.00 மணிக்கு கைது செய்து, பழனிச்சாமி ஆஜர்படுத்திய சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய சுமார் 3 லிட்டர் கள்ளை அதே இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாதால் என்னுடன் ரோந்துக்கு வந்திருந்த நானும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு மஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1** ஆகும்.

2) கைப்பற்றிய வழக்கு சொத்தை போதிய பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், கெட்டுபோகும் தன்மை உடையது என்ற காரணத்தினாலும் அதே சாட்சிகள் முன்னிலையில் 10.30 மணிக்கு அழித்தல் மகஜர் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த **அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். எதிரிகளை நிலையம் கொண்டு வந்து 11.30 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.260/2024, சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) எத்தனை மணிக்கு ரோந்து செல்லவேண்டும் என்று உதவி ஆய்வாளர் அழைத்தார் என்றால் காலை 10.00 மணிக்கு சொன்னார். அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் காவல் நிலையத்தில் இருந்தேன். மற்றொரு காவலர் பிரகாஷ் எங்கு இருந்தார் என்றால் காவல் நிலையத்தில் இருந்தார். நான் எங்கு வந்து மற்றவர்களுடன் இணைந்துகொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் இணைந்துகொண்டேன். யார், யார்

ரோந்துக்கு சென்றோம் என்றால் நான் மற்றும் உதவி ஆய்வாளர் மூர்த்தி, காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் சென்றோம். எந்த வாகனத்தில் ஆய்வுக்கு சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எவ்வாறு சென்றோம் என்றால் தனித்தனி இருசக்கர வாகனங்களில் சென்றோம்.

4) முதலில் எந்த இடத்திற்கு சென்றோம் என்றால் வேறு எங்கும் செல்லவில்லை. உதவி ஆய்வாளருக்கு எவ்வாறு ரகசிய தகவல் கிடைத்தது என்றால் போன் மூலம் ரகசிய தகவல் கிடைத்தது. எதிரியின் தோட்டம் ஊருக்கு எந்த பகுதியில் இருந்தது என்றால் தென்மேற்கு திசையில் உள்ளது. ரோந்துக்கு செல்லும்போது காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அதிகாரி அல்லது பொதுமக்கள் யாரையாவது ஆய்வுக்கு அழைத்து சென்றோமா என்றால் இல்லை. நான் ரோந்துக்கு செல்லும்போது யாருடைய உதவியை உதவி ஆய்வாளர் அழைத்தாரா என்றால் இல்லை. எதிரியின் தோப்பில் எத்தனை தென்னை மரங்கள் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை லிட்டர் கள் இருந்தது என்றால் 3 லிட்டர் கள் இருந்தது. கள் எவ்வாறு அழிக்கப்பட்டது என்றால் மண்ணில் கொட்டி அழிக்கப்பட்டது. கள்ளை ஏன் காவல்நிலையத்திற்கு எடுத்துவரவில்லை என்றால் அது துர்நாற்றம் அடித்ததால் கொண்டு வரவில்லை. கைப்பற்றுதல் மகசர், அழித்தல் மகசர் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் கள் என்று உறுதியாக தெரிந்துகொண்டபின்பு தயார் செய்துவிட்டோம்.

5) கள்ளின் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்படவில்லை. இரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பி ஆய்வு செய்தால்தான் அது கள்ளா அல்லது வேறு ஒரு திரவமா என்று தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வுக்கு அனுப்பிவைத்தோமா என்றால் இல்லை. ஆய்வுக்கு அனுப்பாமல் கள் என்று எவ்வாறு

முடிவு செய்தோம் என்றால் சுண்ணாம்பு தடவாமல் பானையில் கட்டியிருந்தார்கள், அது கள் வாடை அடித்ததை வைத்து தெரிந்துகொண்டோம். எதிரி கள் இறக்கவில்லை என்றும், அவ்வாறு உண்மையில் கள் இறக்கியிருந்தால் அதை நாங்கள் ஆய்வுக்கு அனுப்பியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை எவ்வாறு நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் இருசக்கர வாகனங்களில் அழைத்துவந்தோம். கள் இறக்க ஏணி, அருவாள், அருவாள் வைக்கிற பெட்டி தேவை என்றால் சரிதான். மேற்படி பொருட்களை கைப்பற்றினோமா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் மேற்படி பொருட்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருப்போம் என்றும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) சொன்ன நேரம், சொன்ன விதத்தில் ரெய்டு நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கள் இறக்காததால்தான் கள்ளை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரக்கணக்கிற்காக உதவி ஆய்வாளர் பொய்யாக எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி விவசாய சங்க போராட்டங்களில் கலந்து கொள்வதால் அவர் மீது ஆய்வாளர் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர், அழித்தல் மகசர் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.06.08 18:21:17 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : STC 2100 of 2024
வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மூர்த்தி | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | கனகராஜ் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08.06.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 08.06.2026**

1) நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2024 ஆம் தேதி காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது முதல் நிலை காவலர் திரு. பிரகாஷ் மற்றும் காவலர் சந்தோஷ் ஆகியோருடன் காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கேத்தனூர், எலவந்தி, கள்ளிபாளையம், புத்தரச்சல் ஆகிய இடங்களில் மதுவிலக்கு குற்ற தடுப்பு அலுவலக ரோந்து செய்துகொண்டிருந்தபோது கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வெள்ளநத்தம் பெரியகாட்டுத்தோட்டத்தில் பழனிச்சாமி என்பவருக்கு சென்றபோது அங்கு தென்னை மரங்களுக்கு இடையில் நின்று கொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்டியை கண்டிவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் பழனிச்சாமி என்றும், வெள்ளநத்தம் பெரியகாட்டுத்தோட்டத்தை சேர்ந்தவர் என்று சொன்னவரை அவர் தன்னுடைய தென்னை தோப்பிலிருந்து தென்னை மரங்களிலிருந்து பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத மண் பானைகளை வைத்து சட்ட விரோதமாக தன்னுடைய சுயலாபத்திற்காக கள்

இறக்கி அதை விற்பனை செய்ய வைத்திருப்பதாக சொல்லி அவர் தென்னை மரங்களுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த மண் பானைகளியிலிருந்த கள்ளை எடுத்து ஆஜர் செய்தவரை 28.08.2024 ஆம் தேதி 10.00 மணிக்கு கைது செய்து, பழனிச்சாமி ஆஜர்படுத்திய சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய சுமார் 3 லிட்டர் கள்ளை அதே இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாதால் என்னுடன் ரோந்துக்கு வந்திருந்த நானும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு மஜரில் நான் கைப்பற்றினேன். என்னுடன் ரோந்துக்கு வந்த முதல்நிலை காவலர் பிரகாஷ் மற்றும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு மஜரில் கைப்பற்றினேன்.

2) கைப்பற்றிய வழக்கு சொத்தை போதிய பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், கெட்டுபோகும் தன்மை உடையது என்ற காரணத்தினாலும் அதே சாட்சிகள் முன்னிலையில் 10.15 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்தேன். எதிரியை நிலையம் கொண்டு வந்து 10.30 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.241/2024, சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும். சாட்சிகள் பிரகாஷ், சந்தோஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

3) எத்தனை மணிக்கு ரோந்து செல்லவேண்டும் என்று நான் கூறினேன் என்றால் மாலை 10.00 மணிக்கு சொன்னேன். அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் காவல் நிலையத்தில் இருந்தேன். முதல் நிலை காவலர் பிரகாஷ் எங்கு இருந்தார் என்றால் காவல் நிலையத்தில் இருந்தார். நான் எங்கு வந்து மற்றவர்களுடன் இணைந்துகொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் இணைந்துகொண்டேன். யார், யார் ரோந்துக்கு சென்றோம்

என்றால் நான் மற்றும் முதல் நிலை காவலர் பிரகாஷ் மற்றும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் சென்றோம். எந்த வாகனத்தில் ஆய்வுக்கு சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எவ்வாறு சென்றோம் என்றால் தனித்தனி இருசக்கர வாகனங்களில் சென்றோம்.

4) முதலில் எந்த இடத்திற்கு சென்றோம் என்றால் வேறு எங்கும் செல்லவில்லை. எனக்கு எவ்வாறு ரகசிய தகவல் கிடைத்தது என்றால் போன் மூலம் ரகசிய தகவல் கிடைத்தது. எதிரியின் தோட்டம் ஊருக்கு எந்த பகுதியில் இருந்தது என்றால் தென்மேற்கு திசையில் உள்ளது. ரோந்துக்கு செல்லும்போது காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அதிகாரி அல்லது பொதுமக்கள் யாரையாவது ஆய்வுக்கு அழைத்து சென்றோமா என்றால் இல்லை. நான் ரோந்துக்கு செல்லும்போது யாருடைய உதவியை கேட்டேனா என்றால் இல்லை. எதிரியின் தோப்பில் எத்தனை தென்னை மரங்கள் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை லிட்டர் கள் இருந்தது என்றால் 3 லிட்டர் கள் இருந்தது. கள் எவ்வாறு அழிக்கப்பட்டது என்றால் மண்ணில் கொட்டி அழிக்கப்பட்டது. கள்ளை ஏன் காவல்நிலையத்திற்கு எடுத்துவரவில்லை என்றால் அது துர்நாற்றம் அடித்ததால் கொண்டு வரவில்லை. கைப்பற்றுதல் மகசர், அழித்தல் மகசர் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் கள் என்று உறுதியாக தெரிந்துகொண்டபின்பு தயார் செய்துவிட்டோம்.

5) கள்ளின் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்படவில்லை. இரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பி ஆய்வு செய்தால்தான் அது கள்ளா அல்லது வேறு ஒரு திரவமா என்று தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வுக்கு அனுப்பிவைத்தோமா என்றால் இல்லை. ஆய்வுக்கு அனுப்பாமல் கள் என்று எவ்வாறு முடிவு செய்தோம் என்றால் சுண்ணாம்பு தடவாமல் பானையில் கட்டியிருந்தார்கள், அது கள் வாடை அடித்ததை வைத்து தெரிந்துகொண்டோம். எதிரி கள் இறக்கவில்லை என்றும்,

அவ்வாறு உண்மையில் கள் இறக்கியிருந்தால் அதை நாங்கள் ஆய்வுக்கு அனுப்பியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை எவ்வாறு நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் இருசக்கர வாகனங்களில் அழைத்துவந்தோம். கள் இறக்க ஏணி, அருவாள், அருவாள் வைக்கிற பெட்டி தேவை என்றால் சரிதான். மேற்படி பொருட்களை கைப்பற்றினோமா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் மேற்படி பொருட்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருப்போம் என்றும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ரோந்து செல்ல ஆய்வாளர் எழுத்து பூர்வமான உத்தரவு கொடுத்தாரா என்றால் வாய்மொழியாக உத்தரவு கொடுத்தார்.

6) சொன்ன நேரம், சொன்ன விதத்தில் ரெய்டு நடக்கவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கள் இறக்காததால்தான் கள்ளை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரக்கணக்கிற்காக உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் நான் பொய்யாக எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி விவசாய சங்க போராட்டங்களில் கலந்து கொள்வதால் அவர் மீது பொய் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர், அழித்தல் மகசர் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.06.08 18:21:31 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

08.06.2026